### சென்னை – மந்தைவெளி பேருந்துப் பணிமனை – முனையத்தில் ரூ.167.09 கோடி மதிப்பில்

# ஒருங்கிணைந்த பன்முகப் போக்குவரத்து - வணிக வளாகம்!

## கட்டுமானப் பணிக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜன.23–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.01.2026) தலைமைச் செயலகத்தில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் சார்பில் 167 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தற்போதைய மந்தைவெளி பேருந்து பணிமனை மற்றும் முனையத்தில் ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் வணிக வளாகத்திற்கான கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சார்பில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இராஜீவ் காந்தி சாலை ஒக்கியம் மடுவில் புதியதாக கட்டப்பட்டுள்ள நான்கு வழிச் சாலைப்பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.**

மந்தைவெளி பேருந்து முனையத்தில் ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் வணிக வளாகம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

சென்னை, மந்தைவெளி பேருந்து பணிமனை மற்றும் முனையத்தில் 167 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் வணிக வளாகம் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இத்திட்டம் 6,625 சதுர மீட்டர் நிலப்பரப்பில், மொத்தம் 29,385 சதுர மீட்டர் கட்டுமானப் பரப்பளவைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது.

மந்தைவெளி பேருந்து பணிமனை மற்றும் முனையத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த சொத்து மேம்பாட்டுத் திட்டம், கோபுரம் 1 (Tower A) மற்றும் கோபுரம் 2 (Tower B) ஆகிய இரண்டு கோபுரங்களைக் கொண்டுள்ளது. இந்த இரண்டு கோபுரங்களும் இரண்டு அடித்தளங்கள், ஒரு தரைதளம் மற்றும் ஏழு மேல் தளங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கோபுரம் 1 (பேருந்து பணிமனை கட்டிடம்) - இது சில்லறை வணிகத்தை (Retail) மையமாகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது. தரைதளம் சில்லறை வணிக பயன்பாட்டிற்காகவும், ஒருங்கிணைந்த மெட்ரோ நிலைய நுழைவு/வெளியேறும் கட்டமைப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் தளம் முதல் ஏழாவது தளம் வரை சில்லறை வணிக இடங்களுக்காக ஒதுக்கப்படும்.

கோபுரம் 2 (முனையக் கட்டிடம்): இது ஒரு பல்நோக்கு வணிக மேம்பாட்டுத் திட்டமாகும். தரைதளத்தில் சில்லறை வணிக இடங்கள், ஒருங்கிணைந்த மெட்ரோ நிலைய நுழைவு/வெளியேறும் கட்டமைப்பு மற்றும் பேருந்து நிறுத்த வசதிகள் இடம்பெறும். முதல் தளம் முதல் ஏழாவது தளம் வரை வணிகப் பயன்பாட்டிற்காக (Commercial use) ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மேம்பாட்டுத் திட்டம், மந்தைவெளி சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலைய நுழைவு மற்றும் வெளியேறும் கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மெட்ரோ நிலையம் மற்றும் கட்டிட வசதிகளுக்கு இடையே தடையற்ற போக்குவரத்து இணைப்பு உறுதி செய்யப்படுகிறது. இத்திட்டம் சுமார் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும்.

இராஜீவ் காந்தி சாலை ஒக்கியம் மடுவில் புதியதாக கட்டப்பட்டுள்ள நான்கு வழி சாலைப்பாலத்தை திறந்து வைத்தல்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சார்பில் இராஜீவ் காந்தி சாலை ஒக்கியம் மடுவில் 60 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள நான்கு வழி சாலைப்பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சென்னை மெட்ரோ இரயில் (CMRL) இரண்டாம் கட்டத் திட்டத்தின் 3-வது வழித்தடத்தின் உயர்மட்டப் பகுதி பழைய மகாபலிபுரம் சாலை (OMR) வழியாகச் செல்கிறது. ஒக்கியம் மடுவின் குறுக்கே தற்போதுள்ள சாலைப் பாலம் சுமார் 96 மீட்டர் நீளம் கொண்டது. மெட்ரோ இரயில் கட்டமைப்புகள் தற்போதுள்ள நெடுஞ்சாலைப் பாலத்தின் தூண்களுடன் சீரமைக்கப்பட்டு, நீரோட்டத்திற்குத் தடையின்றி அமைக்கத் திட்டமிடப்பட்டது.

டிசம்பர் 2023--ல் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் வெள்ளப்பெருக்கின் போது, ஒக்கியம் மடுவில் நீர் வெளியேற்றும் திறன் போதுமானதாக இல்லை என்பது தெரிய வந்தது. மேலும், பாலத்தின் நீளம் ஒக்கியம் மடுவின் மேல்புறம் மற்றும் கீழ்ப்புறங்களில் உள்ள அகலத்தை விடக் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு, 205 மீட்டர் நீளத்திற்கு சாலைப் பாலம் மற்றும் மெட்ரோ தூண்களை இணைத்து புதிய பாலத்தைக் கட்ட CMRL தீர்மானித்தது. இது 4x40 மீட்டர் மற்றும் 1x45 மீட்டர் இடைவெளிகளுடன், கூடுதல் 1.5 மீட்டர் வரை செங்குத்து இடைவெளியை (Vertical Clearance) உயர்த்தி திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஒக்கியம் மடுவை அகலப்படுத்தவும், அதன் நீர் ஓட்டத்தை மேம்படுத்தவும் வழி வகை செய்கிறது. விரைவான கட்டுமானத்திற்காக எஃகு கட்டமைப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தற்போதுள்ள பாலத்திற்கு அப்பால் தலா 2 வழிகளைக் கொண்ட இரண்டு புதிய சாலைப் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தப் புதிய பாலங்களில் போக்குவரத்து மாற்றப்பட்ட பிறகு, பழைய பாலங்கள் இடிக்கப்படும். பழைய பாலங்கள் இடிக்கப்பட்ட பின், ஏற்கனவே அமைய பெற்றுள்ள 2 வழி சாலை பாலங்களை ஒட்டி கூடுதல் 1 வழி கொண்ட 2 சாலைப் பாலங்கள் மற்றும் மெட்ரோ வழித்தடம் அமைக்கும் பணி தொடங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிறப்பு முயற்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், போக்குவரத்து துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம். ஏ. சித்திக், மாநகர் போக்குவரத்து கழகம் மேலாண்மை இயக்குநர் டி.பிரபு சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சமூக வலைதளத்தில் வலம் வருவது






சித்தரேவு ஊராட்சியைச் சேர்ந்த த.வெ.க. கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் 300 பேர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். த.வெ.க. மாவட்டச் செயற்குழு உறுப்பினர் நெல்லூர் பால்பாண்டி தலைமையில் தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்தினார்.

### பேராவூரணி அரசு மருத்துவமனையில்

# ரூ.5 கோடியில் கூடுதல் மருத்துவக் கட்டமைப்பு - விரைவில் முதல்வர் திறந்து வைக்கிறார்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜன.23-

முதலமைச்சர் அவர்கள் மிக விரைவில், பேராவூரணி அரசு மருத்துவமனையில், ரூ.5 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவக் கட்டமைப்பை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உள்ளார்கள் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு:



**அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு:**

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் க.பரமத்தி, சின்னதாராபுரம், கார்வழி, புன்னம், விஸ்வநாதபுரி, தும்பிவாடி மற்றும் காசிப்பாளையம் ஆகியன செயல்பட்டு வருகின்றன. தென்னிலை கிராமத்தில் இருந்து 8 கி.மீ தொலைவில் க.பரமத்தி ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் 11 கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளக்கோவில் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. தற்போது தென்னிலை கிராமத்தில் ரூ.45 இலட்சம் செலவில் துணை சுகாதார நிலையம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக விரைவில் முடிவடையும் தருவாயில் இருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிச்சயம் கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையம் வரும் பட்சத்தில் அமைத்து தரப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஏற்கெனவே ஒன்றிய அமைச்சகத்தில் இது தொடர்பாக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான அறிவிப்புகள் வரும்பட்சத்தில் நிச்சயம் மன்ற உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும்.

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஏற்கெனவே அவருடைய அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில், கோவிலூர், பெரிய மஞ்சவெளி, மன்வாரி, கோட்டப்பட்டி, நந்தனூர், பன்னப்பட்டி, ஓதாம்பட்டி மற்றும் ஈசநத்தம் ஆகிய 8 இடங்களில் புதிய துணை சுகாதார நிலையம் கட்டித் தரப்பட்டுள்ளது. காசிப்பாளையம், சின்னதாராபுரம் ஆகிய 2 இடங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தி தந்திருக்கிறது. மாலைக்கோவிலூர், ஈசநத்தம், சின்னதாராபுரம், குரும்பட்டி, கே.பாரமதி, பவித்ரம் ஆகிய 6 இடங்களில் ஆயுஷ் நல வாழ்வு மையங்கள் சீரமைத்து தரப்பட்டிருக்கிறது. மலைக்கோவிலூர், சின்னதாராபுரம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

இப்படி பல்வேறு பணிகள் செய்து தரப்பட்டுள்ள நிலையில் அவருடைய கோரிக்கைகளும் ஏற்கெனவே நான் சொன்னது போல ஒன்றிய அரசிடம் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்கின்ற வகையில் தரம் உயர்த்தும் பணிகளுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அவருடைய கோரிக்கை நிறைவேற்றித்தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

மன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல பேராவூரணி அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே ரூ.5 கோடி செலவில் கட்டிடப் பணிகள் நடைபெற்று முடிவடையும் தருவாயில் இருந்துக் கொண்டிருக்கிறது. விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது. அவர் கோரியிருப்பதை போல நிதி ஆதாரம் தந்து கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

20 ஆண்டுகளுக்கு முன்னாள் குடும்ப மருத்துவமனை என்கின்ற இந்த மருத்துவக் கட்டமைப்பு அகற்றப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. 1990களுக்கு முன்னாளில் சுகாதார நிலைய அமைப்புகள் என்று கிராம வாரியாக 8,713 இடங்களில் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் பல்வேறு வகைகளிலான கோரிக்கைகள் வரப்பெற்றதை தொடர்ந்து, இப்போது ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு 5000 மக்கள் தொகை என்கின்ற வகையில் அமையப் பெற்று வருகிறது.

இப்போது துணை சுகாதார நிலையங்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் 642 இடங்களில் அமையும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பணிகள் முடிவுற்று மிக விரைவில் அமையும்பட்சத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்னும் 10 நாட்களில் 642 இடங்களில் துணை சுகாதார நிலையத்தினை திறந்து வைக்கிறார்கள். அவர் கோரிய இடத்தில் புதிய துணை சுகாதார மையம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய விளக்கங்கள் பல்வேறு முறை இந்த மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. புதிய அமைப்புகள் வரும் போது அங்கு இருக்கின்ற மக்கள் தொகை, மருத்துவமனைகளுக்கு இடையே இருக்கின்ற இடைவெளி போன்ற பல்வேறு காரணங்களை கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பாபநாசம் வட்டம், வீரமாங்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 25KV மின்மாற்றி மற்றும் இதர உபகரணங்கள் அமைத்து தர வேண்டும் என்கின்ற கேள்விக்கு அமைச்சர் அவர்கள் இன்றோ நாளையோ மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களை அனுப்பி அவர் கேட்டிருக்கும் மருத்துவக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பதிலளித்தார்.

